தினத்தளம்
PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
www.dhinathdhalam.com
ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 193 · வெள்ளிக்கிழமை Friday · 09.10.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

## பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை:

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் வாகை சூடுவது யார்?




தமிழ்நாட்டில் தாராபுரம் மற்றும் மதுராந்தகம் தனி தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவு கடந்த அக்டோபர் 6ஆம் தேதி நடைபெற்றது. இந்நிலையில், நாளை இந்த இரண்டு தொகுதிகளிலும் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு இடைத்தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

தாராபுரம் இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தனி தொகுதிக்கான இடைத்தேர்தலில் மொத்தம் 22 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதற்கான வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், 80.25 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. கடந்த சட்டமன்ற பொதுத்தேர்தலில் தாராபுரம் தொகுதியில் 89.9 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்த நிலையில், தற்போது 9.65 சதவீதம் குறைவாக வாக்குப்பதிவு பதிவாகியுள்ளது.

வாக்குப்பதிவுக்கு பயன்படுத்தப்பட்ட 642 பேலட் யூனிட்கள், 321 கன்ட்ரோல் யூனிட்கள் மற்றும் 337 வி.வி.பேட் இயந்திரங்கள் திருப்பூர் கலெக்டர் அலுவலகம் அருகே உள்ள எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கல்லூரியில் உள்ள ஸ்ட்ராங் ரூமில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. நாளை காலை 8 மணிக்கு முதலில் தபால் வாக்குகள் இரண்டு மேசைகளில் எண்ணப்படுகின்றன. காலை 8.30 மணிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணிக்கை தொடங்குகிறது.

320 வாக்குச்சாவடிகளில் பதிவான வாக்குகள் 14 மேசைகளில் 23 சுற்றுகளாக எண்ணப்பட உள்ளன. ஒவ்வொரு சுற்று முடிவிலும் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் தனித்தனியாக அறிவிக்கப்படும். இதையடுத்து, எல்.ஆர்.ஜி. கல்லூரியில் 200-க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அனைத்து 23 சுற்றுகளும் நிறைவடைந்து, தபால் வாக்குகள் மற்றும் மின்னணு வாக்குகள் ஒருங்கிணைக்கப்பட்ட பிறகு, தாராபுரம் தொகுதியின் இறுதி தேர்தல் முடிவு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி தொகுதியில் இடைத்தேர்தல் முடிவடைந்த நிலையில், அங்கு 86.26 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சட்டமன்ற பொதுத்தேர்தலில் மதுராந்தகம் தொகுதியில் 93.22 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தது குறிப்பிடத்தக்கது.

மதுராந்தகம் தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடம் மதுராந்தகம் தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடம் (ETV Bharat Tamil Nadu) இதையொட்டி செங்கல்பட்டு அடுத்த ஆத்தூரில் உள்ள சமூக மேம்பாட்டுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மதுராந்தகம் தொகுதியில் உள்ள 285 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் பலத்த பாதுகாப்புடன் செங்கல்பட்டு அருகே ஆத்தூரில் உள்ள வாக்கு என்னும் மையத்துக்கு கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு மையத்தைச் சுற்றிலும் மூன்று அடுக்கு காவல் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதல் அடுக்கில் மத்திய ஆயுதப்படையைச் சேர்ந்த காவலர்களும், இரண்டாவது அடுக்கில் துப்பாக்கி ஏந்திய தமிழ்நாடு காவல்துறையினரும், மூன்றாவது அடுக்கில் செங்கல்பட்டு மாவட்ட காவல்துறையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மத்திய ஆயுதப்படையைச் சேர்ந்த 70 துப்பாக்கி ஏந்திய காவலர்கள் உட்பட மொத்தம் 150-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நாளை காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்காக 14 மேஜைகள் அமைக்கப்பட்டுள்ளன. தபால் வாக்குகளை எண்ணுவதற்கும் தனியாக மேஜைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மொத்தமாக 21 சுற்றுகளாக வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. ஒவ்வொரு சுற்றிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு, சுற்று வாரியாக முடிவுகள் அறிவிக்கப்படும். அனைத்து சுற்றுகளும் முடிவடைந்த பின்னர் இறுதி தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூந்தமல்லி, போரூர், வடபழனி மெட்ரோ வழித்தடம் தொடக்கம்:

# திமுக அரசின் இடம் சரித்திரத்தில் எவராலும் மறைக்க முடியாத இடமாக நிலைபெற்றிருக்கும்" மு.க.ஸ்டாலின் பெருமிதம்





சென்னை: பூந்தமல்லி - போரூர் - வடபழனி மெட்ரோ வழித்தடம் வரும் 11-ம் தேதி தொடங்கிவைக்கப்பட உள்ள நிலையில், "சென்னை மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றத்திலும் திமுக அரசின் இடம் சரித்திரத்தில் எவராலும் மறைக்க முடியாத இடமாக நிலைபெற்றிருக்கும்" என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திராவிட மாடல் அரசால் கட்டி முடிக்கப்பட்ட பூந்தமல்லி - போரூர் - வடபழனி இடையேயான சென்னை மெட்ரோ வழித்தடம் அக்டோபர் 11-ஆம் தேதி மக்கள் பயன்பாட்டுக்கு வரவுள்ள நிலையில், அதுகுறித்த சில செய்திகளைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டம் நான் துணை முதல்வராக இருந்தபோது தொடங்கப்பட்டது. இதற்காக, அப்போது நான் ஜப்பான் சென்று JICA-வின் நிதியைப் பெற்று வந்து இந்தத் திட்டத்தை மேற்கொண்டோம்.

இதனையடுத்து சென்னை மெட்ரோ ரயிலின் முதற்கட்டப் பணிகள் நிறைவுபெற்றபோது, விமான நிலையம் - சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் - கோயம்பேடு புறநகர்ப் பேருந்து முனையம் எனச் சென்னையின் முக்கியமான போக்குவரத்து மையங்கள் இணைக்கப்பட்டு, சென்னையின் வளர்ந்து வரும் போக்குவரத்து நெரிசலுக்கு மாமருந்தாகவும், மாநகரின் பொதுப் போக்குவரத்து அமைப்பில் மிகப் பெரும் மைல்கல்லாகவும் இது அமைந்தது. தற்போது இத்தடத்தில் விம்கோ நகர் வரை ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, "சென்னைக்கு மெட்ரோ ரயில் தேவையில்லை, மோனோ ரயில் போதும்" என அடுத்து வந்த அதிமுக அரசு இதனைத் தடை செய்ய நினைத்து, அது முடியாமல் போன நிலையில், பின்னர் அவர்களே முடிவுற்ற பணிகளைத் தொடங்கியும் வைத்தனர். அதுமட்டுமின்றி, 2015-ஆம் ஆண்டு சென்னைப் பெருவெள்ளத்தின்போது சாலைகள் மூழ்கித் துண்டிக்கப்பட்ட நிலையில், லட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மெட்ரோ மூலமாகப் பயணித்தபோது சென்னைக்கு மெட்ரோ ரயிலின் தேவை அனைவராலும் உணரப்பட்டது.

இதனையடுத்து, சென்னை மெட்ரோ ரயிலின் இரண்டாம் கட்டப் பணிகள் கடந்த அதிமுக ஆட்சிக்காலத்தில் பல்வேறு காரணங்களால் சுணக்கம் கண்டிருந்த நிலையில், 2021-ஆம் ஆண்டு நமது திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும் அதனை விரைவுபடுத்தினோம். இதற்கான ஒன்றிய அரசின் பங்களிப்பு நிதி மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக விடுவிக்கப்படாமல் இருந்த நிலையிலும், பணிகளைத் தொய்வின்றி மேற்கொண்டோம்.

2021-ஆம் ஆண்டு தொடங்கி, பிரதமரை நான் நேரில் சந்திக்கும்போதெல்லாம் இதுகுறித்த கோரிக்கை மனுவினை அளித்து, ஒன்றிய அரசின் பங்கினைக் காலதாமதம் செய்யாமல் விடுவிக்கத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன். கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையிலும், 2024 செப்டம்பர் நிலவரப்படி, மாநில அரசின் சொந்த நிதியிலிருந்து 11,762 கோடி ரூபாயும், வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் கடனுதவி மூலம் 6,802 கோடி என மொத்தம் 18,564 கோடி ரூபாயைச் செலவிட்டு நமது அரசில் இரண்டாம் கட்டப் பணிகளை நிறுத்தாமல் தொடர்ந்தோம்.

குறிப்பாக, 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இதுகுறித்த விளக்கமான கடிதம் ஒன்றை பிரதமருக்கு அனுப்பி, தொடக்கத்தில் வாக்களித்தபடி 50:50 பங்கு மூலதன அடிப்படையிலேயே சென்னை மெட்ரோ ரயிலின் இரண்டாம் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முழுக்க மாநில அரசின் நிதியில் மேற்கொள்வதால் மாநில அரசுக்குப் பெரும் நிதி நெருக்கடி ஏற்படுவதோடு, பணிகளும் தாமதமாவதை எடுத்துக் கூறினேன்.

இதனைத் தொடர்ந்து, 2024-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நான் பிரதமரை நேரில் சந்தித்தபோதும் இதுகுறித்துப் பேசினேன். இதற்குப் பின்னர்தான், அக்டோபர் மாதம் நமது கோரிக்கை ஒன்றிய அரசால் ஏற்கப்பட்டது. ஒன்றிய அமைச்சர் மனோகர் லால் கட்டரையும் சென்னை மெட்ரோ இரயில் தலைமையகத்தில் சந்தித்து, இதற்காக நன்றி தெரிவித்து மெட்ரோ விரிவாக்கத்தை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து அவரிடம் பேசினேன்.

பல்வேறு தருணங்களில் சென்னை மெட்ரோவின் இரண்டாம் கட்டப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தேன். சென்னை, மாதவரம் பால் பண்ணை அருகில், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் வழித்தடம் 3-இன் சுரங்கப்பாதை கட்டுமானப் பணிகளில், மாதவரம் பால் பண்ணை மெட்ரோ நிலையத்திலிருந்து மாதவரம் நெடுஞ்சாலை மெட்ரோ நிலையம் வரை 1.4 கி.மீ நீளத்திற்கு சுரங்கம் தோண்டும் பணியினை 13-10-2022 அன்று தொடங்கி வைத்தேன்.

2025-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், கெல்லீஸ் முதல் தரமணி வரையிலான சுரங்க வழித்தடப் பகுதியில் கிரீன்வேஸ் சாலை மெட்ரோ நிலையம் முதல் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் வரையிலான பணியில், 300 மீட்டர் அடையாறு ஆற்றிற்குக் கீழ் செல்லும் சவாலான வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தைக் கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் பணியினைப் பார்வையிட்டு, இப்பணியை மேற்கொண்டு வருவோரை ஊக்கப்படுத்தினேன். 2025-ஆம் ஆண்டு ஜூன் மாதம், கிண்டி கத்திபாரா மேம்பாலத்தின் மேல், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத்தில் கட்டுமானப் பொறியியலின் அதிசயமாக உருவாகி வரும் 108 அடி உயர மெட்ரோ பாலத்துக்கும் சென்று ஆய்வு மேற்கொண்டேன்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## சொத்து விவரம் தாக்கல் செய்தால் மட்டுமே

# அரசு ஊழியர்களுக்கு பதவி உயர்வு: தமிழக அரசு அதிரடி உத்தரவு




தமிழக அரசின் தலைமைச் செயலாளர் சாய்குமார் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:- தமிழக அரசு ஊழியர்கள் அனைவரும் தங்களின் அசையும், அசையா சொத்து கள், சேமிப்பு, கடன் உள்ளிட்ட அனைத்து சொத்து விவரங்களையும் வருகிற 31-ந் தேதிக்குள் தமிழக அரசின் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்.

வேறு யார் பெயரிலும் அரசு ஊழியர்கள் சொத்துகள் வாங்கியிருந்தாலும் அவற்றையும் குறிப்பிட்டு அந்த நபருக்கும், அரசு ஊழியருக்கும் என்ன உறவு என்பதையும் குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் சொத்து மதிப்புகளை தாக்கல் செய்யும் அரசு ஊழியர் கள் பெயர்கள் தான் பதவி உயர்வுக்கான பட்டியலில் இடம்பெறும். சொத்து விவரங்களை தாக்கல் செய்யாதவர்கள், அரசு ஊழியர்களுக்கான நன்னடத்தை விதியை மீறியதாக கருதப்படுவர். இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

## தேனியில் பரபரப்பு

# தனது வீட்டில் அத்துமீறி நுழைந்து தாயார் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் கோரி கணவர் மனு

அத்துமீறி வீட்டில் நுழைந்து பொருட்களை எடுத்துச் சென்றவர்கள் மீது மற்றும்எனது அம்மாவை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி கணவர் ஒருவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்துள்ளார். தனது வீட்டில் இருந்த பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டதாகவும், தன்னையும் தனது குடும்பத்தினரையும் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அளிக்கப்பட்டுள்ள மனுவில், மனுதாரர் கடந்த 2017ஆம் ஆண்டு குப்பசாமி மகள் சோலைப்பிரியாவை திருமணம் செய்து கொண்டதாக தெரிவித்துள்ளார்.

தங்களுக்கு 8 வயது ஆண் குழந்தையும், 4 வயதுபெண்குழந்தையும் உள்ளதாகவும், கடந்த சில மாதங்களாக மனைவி தன்னை விட்டு பிரிந்து சென்றதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்தசெப்டம்பர்8ஆம் தேதி மனைவியை சந்தித்து அழைத்து வருவதற்காக சென்றபோது, குடும்ப வாழ்க்கை தொடர்பாக மனைவி சில தகவல்களை தெரிவித்ததாகவும், அதன் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி மனு அளித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், செப்டம்பர் 18ஆம் தேதி வழக்கறிஞர் மூலம் மனைவிக்கு நோட்டீஸ் அனுப்பியதாகவும், அதனைத் தொடர்ந்து அக்டோபர் 4ஆம் தேதி தேனி அனைத்துமகளிர்காவல் நிலையத்தில் பணிபுரியும் சார்பு ஆய்வாளர் உள்ளிட்ட காவல்துறையினரை சந்தித்ததாகவும் மனுவில் கூறியுள்ளார்.

அப்போது,பெண்காவலர் என்பவருடன் தொடர்புடையவர்கள் தனது வீட்டிற்குள் நுழைந்து, வீட்டிலிருந்த பீரோ, வாஷிங் மெஷின், கட்டில்,சமையல்பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் மற்றும் தனது மனைவி மற்றும் பிள்ளைகளின் ஆவணங்கள்,ஆதார் அட்டை, ரேஷன் அட்டை உள்ளிட்டவற்றை எடுத்துச் சென்றதாக மனுதாரர் குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும், தனது வீட்டிற்கு வந்து பொருட்களை எடுத்துச் சென்றவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தனது குடும்பத்திற்கும் மற்றும்குழந்தைகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியரிடம் மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தபுகார்தொடர்பாக உரிய விசாரணைநடத்தி, உண்மை நிலையை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மனுதாரரின் கோரிக்கையாகஉள்ளது



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள திருநாவலூர் கெடிலத்தில் வி த லீடர்ஸ் அமைப்பின் சார்பில் பெண்கள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது தொகுதி ஒருங்கிணைப்பாளர் அழகுஇளங்கோ தலைமையில் நடைபெற்ற இந்த கையெழுத்து இயக்கத்தில் வீ த லீடர்ஸ் அமைப்பின் நிர்வாகிகள் சிவக்குமார், இளங்கோவன், கார்த்திகேயன், டாக்டர் ராஜா மற்றும் பொதுமக்கள் பெண்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அப்பொழுது பெண்கள் துணிவாக இருக்க வேண்டும் அவசர நிலை ஏற்பட்டால் அருகில் உள்ளவர்களிடம் உதவி கேட்பது சந்தேகமான நபர்களிடம் எச்சரிக்கையாக இருப்பது இரவு நேர பயணத்தை தவிர்ப்பது தவிர்க்க முடியாத சூழலில் பயணிக்க வேண்டிய நிலையில் பாதுகாப்பான முறையில் பயணம் செய்வது இணையதளங்களில் தனிப்பட்ட தகவல்களை பகிராமல் பாதுகாப்பது உட்பட பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு விநியோகம் செய்தனர் மேலும் அவசரத் தேவைக்கு காவல்துறை உதவி எண் 100, பெண்கள் பாதுகாப்பு உதவி எண் 1091, குழந்தைகள் பாதுகாப்பு உதவி எண் 1098, 108 ஆம்புலன்ஸ் மகளிர் உதவி எண் 181 ஆகியவற்றை பயன்படுத்தி பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# கோவையில் குறைமாதப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளின் சிகிச்சைக்கு உதவும் வகையில் 3டி, டிஸ்கோ தூள் டாண்டியா நிகழ்ச்சி

## கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள ஹிந்துஸ்தான் கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளது



கோவையில் குறைமாதப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளின் மருத்துவ சிகிச்சைக்கு உதவும் வகையில், ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் அர்பன் சார்பாக, அதன் கூட்டமைப்பு ரோட்டரி கிளப்புகளுடன் இணைந்து '3டி டிஸ்கோ தூள் டாண்டியா இரவு' நிகழ்ச்சியை, வரும், அக்டோபர் 10-ஆம் தேதி நடத்த திட்டமிட்டு ள்ளனர் கோவை நவ இந்தியா, பகுதியில் உள்ள, ஹிந்துஸ்தான் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ள இந்நிகழ்ச்சியில் 1,500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்க உள்ளதாகவும், தி சென்னை சில்க்ஸ் நிறுவனத்துடன் இணைந்து நடைபெறும் இந்நிகழ்ச்சியின் மூலமாக, திரட்டப்படும் நிதி, கோவையில் உள்ள, குறைமாதக் குழந்தைகளின் சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட உள்ளது.

டாண்டியா என்பது அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரு கொண்டாட்டமாக வும், இந்த ஆண்டு கோவையின் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து, நமது சமூகத்தில், குறைமாதக் குழந்தைகளுக்காகஇந்த விழாவை கொண்டாட உள்ளனர். ஒவ்வொரு நன்கொடையாளரின் அனுமதிச் சீட்டும் ஒரு குழந்தைக்கு தேவையான மருத்துவ சிகிச்சையை வழங்க உதவும், என ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் அர்பன் தலைவர் ரோட்டேரியன் சந்தீப் ஷா தெரிவித்தார். மேலும், குறைமாதத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு பல வாரங்கள் அல்லது பல மாதங்கள் தீவிர சிகிச்சை தேவைப்படுவதுடன், அதற்கான மருத்துவச் செலவுகளும்,பலலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கக்கூடும் நிலை உள்ளது,

இதனால் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றன. 'பிரகாசமான எதிர்காலத்திற்காக நடனமாடுவோம்' என்ற கருப்பொருளின் கீழ் நடத்த படும்

இந்த இசைநிகழ்ச்சி, நவராத்திரி கொண்டாட்டத்துடன் சமூக நல நோக்கத்தையும் இணைக்க உள்ளது. இங்கு

இசைக் கச்சேரி , டிஜே மற்றும் தூள் இசைக்குழுவின் இசையுடன் டாண்டியா மற்றும் டிஸ்கோ நடனங்கள் நடைபெற உள்ளது. மேலும் இங்கு உணவு அரங்குகள்,இரவு உணவு மற்றும் பல்வேறு பரிசுகளும் வழங்க பட உள்ளது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் ஆண்கள் மற்றும்பெண்களுக்கான

நடனப் பயிற்சி முகாம், கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள பிரியகுஞ்சில் நடைபெற்றது. இந்த பயிற்சியில் 'தி கூல் க்ரூ'வைச் சேர்ந்த கிஞ்சல் ஜோஷி அக்டோபர் 4 மற்றும் 5-ஆம்தேதிகளில்பயிற்சி அளித்தார். கோவையைச் சேர்ந்த '2 லெஃப்ட் ஃபீட்' டான்ஸ் ஸ்டுடியோ'வின் நடன இயக்குநர் ரஞ்சித், லீலா டான்ஸ் கம்பெனியுடன் இணைந்து அக்டோபர் 7-ஆம் தேதி பயிற்சி அளித்து வருவதாக நிகழ்ச்சியின் தலைவர் ரோட்டேரியன் பிரேம் குமார் மைனானி தெரிவித்துள்ளார்




# மேல்விஷாரம் சுடுகாட்டில் நகராட்சி நிர்வாகம் குப்பை கொட்டியதால் பரபரப்பு: நடவடிக்கை எடுப்பதாக ஆணையர் உறுதி

ராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம் நகராட்சிக்குட்பட்ட 5 மற்றும் 6-வது வார்டு பகுதிகளான தஞ்சாவூரான் காலனி, பாக்தினி, டி.எம். ஷாப் லைன் மற்றும் பழைய ஆட்டுத் தொட்டி ஆகிய பகுதிகளில் ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

இப்பகுதியில் உயிரிழப்பவர்களின் உடல்களை, பாலாற்றங்கரையொட்டி அமைந்துள்ள மயானப் பகுதியில் பொதுமக்கள் காலங்காலமாக அடக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தச் சுடுகாட்டின் அருகிலேயே மேல்விஷாரம் நகராட்சியின் குப்பைகிடங்கும்செயல்பட்டு வருகிறது. இங்குச் சேகரமாகும் கழிவுகள் மலை போல் குவிந்து கிடக்கும் நிலையில், இக்குப்பைகளைத் தரம் பிரிக்கும் ஒப்பந்தத்தை கோயம்புத்தூரைச் சேர்ந்த 'பை மேன்' (Bio-man) என்ற நிறுவனம் பெற்று நடத்தி வருகிறது.

இந்நிலையில், நேற்றைய முன் தினம் நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் மயானப் பகுதியில் குப்பைகள் அள்ளி கொட்டப்பட்டு, திடீரென புதிய குப்பை மலை உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், சுடுகாட்டில் இருந்த கல்லறைகளை இடித்து சேதப்படுத்திய தோடு, அங்கிருந்த மரம், செடி, கொடிகளையும் பிடுங்கி அகற்றியுள்ளனர். தொடர்ந்து மயான இடத்திலேயே குப்பைகளைக் கொட்டி தரம் பிரிக்கவும் திட்டமிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மயான நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு குப்பை கொட்டப்பட்டதை அறிந்து அதிர்ச்சியடைந்த 5 மற்றும் 6-வது வார்டு பொதுமக்கள், திரளாக மேல்விஷாரம் நகராட்சி அலுவலகத்திற்குச் சென்று ஆணையரிடம் முறையிட்டு புகார் மனு அளித்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையைக் கேட்டறிந்த நகராட்சி ஆணையர், விரைவில் சம்பவ இடத்திற்கு நேரடியாக வந்து ஆய்வு மேற்கொள்வதாகவும், சுடுகாட்டில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றி, இனிமேல் அப்பகுதியில் குப்பைகள் கொட்டப்படாதவாறு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி அளித்தார். ஆணையரின் இந்த உறுதியைத் தொடர்ந்து பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## ஈரோடு மாநகர் சூரம்பட்டி ஜெகநாதபுரம் காலனியில்

# விசைத்தறி பயிற்சி வகுப்புக்கள் வருகின்ற 16 ம் தேதி தொடங்கப்படுகிறது

ஈரோடு மாநகர் சூரம்பட்டி ஜெகநாதபுரம் காலனியில் மத்திய ஜவுளித் துறை அமைச்சகத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஜவுளி மற்றும் ஆடை மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. இங்க நெசவு வடிவமைப்பு,நெசவு கணக்கீடு, துணியின்தரபகுப்பாய்வு என அடிப்படை விசைத்தறி பயிற்சி வழங்கப்படுகிறது. இங்கு சாதா, டாபி, டெரி, புரோ ஜெக்டைல், ராபியர், ஏர் ஜெட் ஆகிய தறிகள் அமைக் கப்பட்டு உள்ளன.இங்குவிசைத்தறி பயிற்சி வகுப்புக்கள் வருகின்ற 16 ம் தேதி தொடங்கப்படுகிறது.



எனவே விசைத்தறி தொழிலில் ஆர்வ முள்ளவர்கள் பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாம்

ஆகவே, மத்திய அரசின் இந்த சேவைகளை பயன்படுத்தி கொள்ளுமாறு ஒருங்கிணைந்த ஜவுளி மற்றும் ஆடை மேம்பாட்டு மையம் கேட்டுக்கொள்கிறது. மேலும் விபரங்களுக்கு 0424-2271357/ 9619300495 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்என உதவி இயக்குநர் மற்றும் அலுவலக பொறுப்பு அதிகாரி

எம். லோகேஷ் தெரிவித்துள்ளார்.

## கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு கல்லூரி வளாகத்தில்,

# மூன்று ஐடிஎஃப் தரநிலை மதிப்பீடுகளுடன் கூடிய டென்னிஸ் மைதானங்களுடன் டென்னிஸ் அகாடமி தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது



கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள, குமரகுரு கல்லூரி, வளாகத்தில் சுமார், 22,065 சதுர அடி பரப்பளவில் மூன்று ஐடிஎஃப் தரநிலை மதிப்பீடுகளுடன், கூடிய டென்னிஸ் மைதானங்களுடன் அமைக்கப்பட்டுள்ள குமரகுரு டென்னிஸ் அகாடமி மற்றும் மிட்ஃபீல்ட் விளையாட்டு மையம் துவங்கபட்டுள்ளது. டென்னிஸ் விளையாட்டில் முறையான பயிற்சி, தொடர் பயிற்சி மற்றும் போட்டிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் இந்த விளையாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

புதிய மையத்தில், செயற்கை அக்ரிலிக் தரைத்தளம், பிரத்யேக மைதான விளக்குகள் 12 அடி உயரவேலிஅமைக்கப்பட்டுள்ளன. மேலும், பயிற்சிச் சுவர் மற்றும் வாகன நிறுத்துமிட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குமரகுரு டென்னிஸ் அகாடமி, குமரகுரு மாணவர்கள் மட்டுமின்றி பொதுமக்களுக்கும் முறையான டென்னிஸ் பயிற்சி மற்றும் தொடர் பயிற்சி வாய்ப்புகளை வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. அடிப்படை திறன்களை வளர்த்துக்கொள்வது முதல் போட்டித் தரத்திலான டென்னிஸ் பயிற்சி பெறுவது வரை வெவ்வேறு நிலைகளில் உள்ள வீரர்களுக்குஏற்பபயிற்சி வழங்கப்பட உள்ளது. திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 5 மணி முதல் 8 மணிவரைபயிற்சிஅமர்வுகள் நடைபெற உள்ளன. அகாடமியின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக டென்னிஸ் ஆதரவு திட்டமும் அமைந்துள்ளது. இந்த விளையாட்டு வசதி மையத்தை, சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் பேராசிரியர் டாக்டர் அஷ்வின் மகாலிங்கம் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். மேலும் இந்த நிகழ்ச்சியில் குமரகுரு நிறுவனங்களின் தலைவர் சங்கர் வனவராயர், கோவை மாவட்ட டென்னிஸ் சங்கத்தின் பொருளாளர் நரேந்திர குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கழகம் (ICT Academy) இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களுக்கு, சென்னை மாவட்டத்தில் மென் பொருள், வலைதளம் வடிவமைப்பாளர் மற்றும் பயன்பாட்டு மென்பொருள் மேம்பாட்டாளர் பயிற்சியும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் மென் பொருள், வலைதளம்வடிவமைப்பாளர், பயன்பாட்டு மென்பொருள் மேம்பாட்டாளர், தரவுப் பகுப்பாய்வாளர். நுண்நிதி நிர்வாகம் மற்றும் காப்பீட்டு முகவர் பயிற்சியும், மதுரை மாவட்டத்தில் தரவுப் பகுப்பாய்வாளர், மென் பொருள் வடிவமைப்பாளர், நுண்நிதி நிர்வாகம் மற்றும் காப்பீட்டு முகவர் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

மென் பொருள் சார்ந்த பயிற்சி பெற இளங்கலை பொறியியல் மற்றும் பி,எஸ்.சி கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் பட்டம் பெற்று இருக்க வேண்டும். நிதி சார்ந்த பயிற்சிகள் பெற இளங்கலை வணிகவியல் மற்றும் இளங்கலை வணிக நிர்வாகவியல் ஆகிய பாடங்களில் பட்டம் பெற்று இருக்க வேண்டும்.

இப்பயிற்சியினை பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராகவும், வயது வரம்பு 18 முதல் 35 வயதிற்குள்ளும், மற்றும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சி சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியினை முழுமையாக முடித்த இளைஞர்களுக்கு சான்றிதழ் மற்றும் பயிற்சி அளிக்கும்நிறுவனத்தின் மூலமாக தகுதியான நபர்களுக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்தி தரப்படும். இப்பயிற்சியில் சேருவதற்கு தாட்கோ இணையதளமான www.tahdco.com என்ற முகவரியில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும்விபரங்களுக்கு தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகம், 6வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு. தொலைபேசி எண் அணுகவும். 0424-2259453



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஈங்கூர் கிராமம், சிப்காட்டில் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , கைத்தறி துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மரு.V.K.ராஜீவ், ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் நேற்று (08.10.2026) துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள்.உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன் உட்பட பலர் உள்ளனர்.

### ஈரோடு மாவட்டத்தில் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தலைமையில்

## சிப்காட் குடிநீர் மற்றும் CETP பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது



ஈரோடு மாவட்டம், பெருந்துறை, சிப்காட் தொழிற்பேட்டை கூட்ட அரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி , மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மரு.வி.கே. ராஜீவ் அவர்கள் ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி முன்னிலையில் பெருந்துறை சிப்காட் தொடர்பான குடிநீர் மற்றும் சுற்றுச்சூழல் பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நேற்று (08.10.2026) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சிப்காட் நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் CETP பணிகளின் முன்னேற்றம், ஈங்கூர் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு CSR நிதி பெறுதல் உள்ளிட்ட பணிகள்குறித்துஆலோசிக்கப்பட்டது. மேலும், பெருந்துறை சிப்காட் சுற்றுவட்டாரத்தில் உள்ள ஈங்கூர். வரப்பாளையம், வாய்பாடி, முகாசிபாளையம், புஞ்சை பாலத்தொழுவு மற்றும் சிறுகடுத்து ஆகிய ஊராட்சிகளில் ஆழ்குழாய் கிணறுகளில் நீர் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், அப்பகுதி மக்களுக்கு தற்போது சென்னிமலை கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம்குடிநீர் வழங்கப்பட்டு வருவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதற்கு நிரந்தரத் தீர்வாக, சிப்காட் நிறுவனத்தின் தற்போதைய குடிநீர் வழங்கல் திட்டத்தை மேம்படுத்தி, தினமும் 3.00 MLD (30 லட்சம் லிட்டர்) குடிநீர் வழங்கும் வகையில் ரூ.45 கோடி மதிப்பீட்டில்தயாரிக்கப்பட்டுள்ள திட்ட முன்மொழிவு குறித்து ஆலோசிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் புனரமைத்தல், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரேற்று அறைகள் அமைத்தல், பம்ப் செட்டுகள் மற்றும் குழாய்கள் அமைத்தல், தெருவிளக்கு உள்ளிட்ட பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. தொடர்ந்து, சாயப்பட்டறை, டையிங் அசோசியேஷன் மற்றும் சிப்காட் தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் தொழில் சார்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

CETP மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகளை நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் விரைந்து முடிக்கவும், தேவையான தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களை ஈடுபடுத்தவும். கட்டுமானப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதிசெய்யவும்சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும், பணிகளின் தரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை முறையாகப் பின்பற்றி, அனைத்து

துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, பணிகளை விரைந்து முடித்து, பணி முன்னேற்ற அறிக்கையை விரைந்து சமர்ப்பிக்க அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கைத்தறி,துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் அவர்கள், மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் புதியதாக கட்டப்பட்டு வரும் CETP பொது சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின் போது, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ராஜ்குமார். மாசுக்கட்டுப்பாட்டு அலுவலர் லாவண்யா. சிப்காட் திட்ட அலுவலர் சுஜா பிரியதர்ஷினி, சிப்காட் செயற்பொறியாளர் பசுபதி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமா சங்கர், சிப்காட் அலுவலர்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர்.

### செயற்கை சாயங்கள் மற்றும் செயற்கை நார்களால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் வகையில்

## இயற்கை சாயம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ஜவுளி உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் என திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் நிலைத்தன்மை ஆலோசகர் பெரியசாமி தெரிவித்துள்ளார்



கோவை ராமநாதபுரம் பகுதியில் உள்ள, சில்க் வில்லேஜ் ஹேண்ட்லூம் டிரெய்னிங்அண்ட்ரிசர்ச் இன்ஸ்டிடியூட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில், இடிஐ சார்பில் இயற்கை சாயம் மற்றும் பிரிண்டிங் தொடர்பான திறன்மேம்பாட்டுபயிற்சி நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய பெரியசாமி, கூறியதாவது.

இயற்கை சாயம் சார்ந்த தொழில்நுட்பம் இளைஞர்களுக்கு தொழில்முனைவோருக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என்றார். இந்நிகழ்ச்சியில் செல்பிவில்லேஜ் நிறுவனர் கைத்தறி முருகேசன், கைத்தறி ஆராய்ச்சியாளர் தங்கதுரை, இடிஐ துறைதலைவர் நவீன்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தற்போது உலகளவில் ஜவுளித் துறையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில்சுற்றுச்சூழலுக்கு உகந்த, மறுசுழற்சி செய்யக்கூடிய மற்றும் நிலையான ஜவுளிப் பொருட்களுக்கு வரவேற்பு அதிகரித்துள்ளது.

இயற்கை சாயத்தில் முக்கிய சவாலாக உள்ள நிறம் நீடித்திருக்கும் தன்மை, துவைத்தலுக்குப் பிறகு நிறம் மாறாத தன்மை மற்றும் ஒளி எதிர்ப்பு தன்மை போன்ற சர்வதேச தரநிலைகளை பூர்த்தி செய்வதற்கான தொழில்நுட்பங்களை மேம்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இதற்காக சரியான இயற்கை சாயங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை தேர்வு செய்து பயன்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

## சிறுமிகள், பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க காயல் அப்பாஸ் வலியுறுத்தல்



சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு ஏதிரான பாலியல் குற்றங்களை தடுக்க முன்னெச்சிரிக்கைநடவடிக்கைஎடுக்க வேண்டும் என தவெக அரசை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் வலியுறுத்தியுள்ளார் இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

திருவள்ளூர் மாவட்டம் , திருவொற்றியூரில் வடமாநிலத்தைச்சேர்ந்த குடும்பத்தின் 5 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவத்தில் பீகாரைச் சேர்ந்தவரை காவல்துறையினர் கைது செய்தனர் மேலும். கைது செய்ய பட்ட நபரை சட்ட ரீதியாக கடுமையான தண்டனைக்கு உள்ளாக்க பட வேண்டும் மேலும். இந்த பாலியல் இக்கொடூரச் சம்பவத்தை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி மிகவும் வன்மையான கண்டிக்கிறது.

வட மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு பணி புரிய குரைவான சம்பளத்திற்கு தனியார் நிறுவனம் அழைத்து வரும்வடமாநிலதொழிலாளர்கள் மீது அம் மாநிலங்களில் வழக்கு பதிவு செய்ய பட்டிருக்கிறதா மற்றும் காவல் துறையினரால் தேட படும் குற்றவாளிகளாக இருக்கலாம்? கூலி தொழிலாளி என்கிற பெயரில் பதுங்கி இருக்கிறார்களா ? எதேனும் குற்றங்களை நிகழ்த்தி விட்டுதப்பிசெல்லகூடிய வாய்பு இருக்கு ? ஆகவே வட மாநில தொழிலாளர்களை காவல் துறையினர் முறையாக ஆவணங்களை ஆய்வு செய்வதுடன் பல கோனத்திலும் விசாரணைசெய்ய வேண்டும்.

மேலும் தமிழகத்தில் பல்வேறு பகுதியில் பாலியல், கொலை கொள்ளை போன்ற குற்ற செயலில் வட மாநில தொழிலாளர்கள் ஈடு பட்டு வருவதனால் ஒவ்வொருவரின் அடையாளம், பணியிடம், அவரை அழைத்து வந்தவர், தங்குமிடம், முகவரி உள்ளிட்ட அடிப்படை விவரங்கள் அரசின் அதிகாரப்பூர்வ பதிவில் இருக்க வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி வலியுறுத்துகிறது .

எனவே : தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. ஆகவே, இனி வரும் காலங்களில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்ற சம்பவங்கள் தமிழகத்தில் எங்கும் நடை பெறாமல் இருக்கதகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை உடனடியாக எடுப்பதுடன் சிறுமிகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை தவெக அரசு உறுதி செய்ய வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பாக கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

## ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமா?

### கோவை மாவட்ட நலச்சங்க கலந்தாய்வு கூட்டத்தில் நிர்வாகி நாராயணசாமி பேச்சு



கோவை மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்கள் ஒருங்கிணைந்து, "கோவை மாவட்ட அனைத்து ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர்கள் நலச்சங்கம்" என்ற அமைப்பின் கலந்தாய்வு கூட்டத்தை நடத்தினர். இக்கூட்டத்தின் நிறைவில், சங்கத்தின் நிர்வாகி நாராயணசாமி செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

செய்தியாளர்களிடம் பேசிய சங்க நிர்வாகி நாராயணசாமி, கிராமப்புற ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர்கள் சந்தித்து வரும் பல்வேறு சிரமங்கள் குறித்தும், அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய முக்கிய கோரிக்கைகள் குறித்தும் விரிவாகப் பேசினார். "கோவை மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர்கள் ஒன்றிணைந்து இந்தச் சங்கக் கூட்டத்தை நடத்தியுள்ளோம். கடந்த 2008-ஆம் ஆண்டிலும் இதேபோன்று சங்கம் அமைத்துச் செயல்பட்டு வந்தோம்.

ஊரகப் பகுதிகளில் குறைந்த மதிப்பளவிலான ஒப்பந்தப் பணிகளையே எடுத்து, தரம் குறையாமல் அர்ப்பணிப்புடன் செய்து வருகிறோம். ஆனால், கட்டுமானப் பொருட்களின் கடும் விலை உயர்வுக்கு ஏற்ப பொதுப்பணித்துறை வழங்கும் ஒப்பந்தப் புள்ளிகள் (Schedule of Rates) சீராக மாற்றப்படுவதில்லை. சந்தை நிலவரத்தை விட 20 சதவிகிதம், குறைவான மதிப்பீட்டிலேயே பணிகள் ஒதுக்கப்படுகின்றன.

மேலும், ரூ. 10 லட்சத்திற்கு கீழ் உள்ள பணிகளுக்கும் ஆன்லைன் டெண்டர் முறை கொண்டு வரப்பட்டதால், உள்ளூர் ஒப்பந்ததாரர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை அரசு வழங்கி வந்த சிமெண்ட், கம்பி போன்ற கட்டுமானத் தளவாடப் பொருட்களை மீண்டும் ஊரக வளர்ச்சித்துறை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பணிகள் முடிவடைந்து ஆடிட் தொகையை விடுவிப்பதில் ஏற்படும் தாமதம் மற்றும் பிடித்து வைக்கப்படும் இஎம்டி வைப்புத் தொகையை விரைவாக வழங்க வேண்டும். இந்த கூட்டமும் கோரிக்கைகளும் எந்த அரசுக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ எதிரானது அல்ல; ஒப்பந்ததாரர்களின் நியாயமான வாழ்வாதாரப் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வதே எங்களது நோக்கம். ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர்களின் கோரிக்கைகளை அரசு கவனத்தில் கொண்டு, உரிய தீர்வு காண வேண்டும் என்பதே இச்சங்கத்தின் முதன்மையான எதிர்பார்ப்பாக உள்ளது.

## தேங்காப்பட்டணத்தில் நிதி நிறுவனம் மோசடி



கன்னியாகுமரி மாவட்டம் தேங்காப்பட்டணத்தில் செயல்படும் முத்தூட் நிதி நிறுவனம் 25 வாடிக்கையாளர்களின் அடகு நகைகளை வேறு நபர்களின் பெயரில் கூடுதல் தொகைக்கு அடகு வைத்து ரூ.1 கோடி வரை மோசடி செய்ததாக புகார் எழுந்துள்ளது.

தேங்காப்பட்டணம், அம்சி, அரசகுளம், கீழ்குளம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கை விசாரித்த குழித்துறை நீதிமன்றம், வாடிக்கையாளர்களின் நகைகளை உடனடியாக ஒப்படைக்க உத்தரவிட்டது. ஆனால் வங்கி நிர்வாகம் காலதாமதம் செய்வதாகக் கூறி வாடிக்கையாளர்கள் உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி வங்கியை மூடச் செய்தனர். இந்நிலையில் நேற்று மீண்டும் வங்கி திறக்கப்பட்டதால், புதுக்கடை போலீசார் நேரில் சென்று வங்கியை மூட அறிவுறுத்தினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## பட்டாவுக்கு ரூ.1 லட்சம் லஞ்சம் கேட்டதாக புகார்: அதிர்ச்சியில் மூதாட்டி விழுந்து தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதி



தூத்துக்குடி ஓட்டப்பிடாரம் பட்டா மாறுதலுக்காக 1 லட்சம் லஞ்சம் கேட்டதாக கிராம நிர்வாக அலுவலர் மீது குற்றச்சாட்டு எழுந்த நிலையில், அதிர்ச்சியடைந்த மூதாட்டி மயங்கிவிழுந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தூத்துக்குடி மாவட்டம், குறுக்கு ச்சாலை, கே.வேலாயுதபுரம், எஸ்.குமாரபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்கான கிராம நிர்வாக அலுவலராக தனிக்கண்ணன் பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில், ஞானசெல்வி என்ற மூதாட்டி தனது மகன் ராமமூர்த்தியுடன் இணைந்து, தங்களுக்குச் சொந்தமான நிலத்திற்குப் பட்டா பெறுவதற்காக கிராம நிர்வாக அலுவலரை அணுகியுள்ளார். அப்போது, நிலத்திற்கான உரிமை மற்றும் ஆவணங்கள் தங்களிடம் இருந்தபோதிலும், பட்டா மாறுதல்செய்ய 1லட்சம் வழங்க வேண்டும் என அவர் கேட்டதாக மூதாட்டி தரப்பில் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரி லஞ்சம் கேட்டதாகக் கூறப்படும் தகவலால் கடும் அதிர்ச்சியடைந்த ஞானசெல்வி, வீட்டிற்குத் திரும்பிய சிறிது நேரத்தில் திடீரென மயங்கி விழுந்ததாக கூறப்படுகிறது.

உடனடியாக உறவினர்கள் அவரை ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர், மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, தற்போது சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, மூதாட்டிக்கு உரிய உயர்தர சிகிச்சைஅளிக்கவேண்டும் என்றும், அவரது நில ஆவணங்களை முழுமையாக பரிசீலித்து சட்டப்படி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், லஞ்சம் கோரியதாகக்கூறப்படும் கிராம நிர்வாக அலுவலர் தனிக்கண்ணன் மீது லஞ்ச ஒழிப்புத்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி, குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வழக்கறிஞர் செல்வம் கிறிஸ்டோபர் வலியுறுத்தியுள்ளார்.

## பணகுடி அரசு மேல்நிலைப்பள்ளியில் பனை நடும் விழா



நெல்லை மாவட்டம் பணகுடி அரசு மேல்நிலைப் பள்ளியில் நாட்டு நல பணி என்எஸ்எஸ் மூலம் பனை விதைகள் நடும்விழா நடைபெற்றது தலைமைஆசிரியர் முருகன் தலைமை தாங்கினார்

பணகுடி வட்டார ஒருங்கிணைந்த விவசாயிகள் நல சங்க தலைவர் ஆரோக்கிய பிராங்கி ளின். உயிர்நாடி அறக்கட்டளை நிறுவனர் ம. வைகுண்டமணி முன்னிலை வகுத்தனர் விழாவில் ஹரிசுதன். என்எஸ்எஸ் திட்ட அலுவலர் இயற்கைவனம்.பிரபாகரன் முருகன். என் எஸ் எஸ் உதவி திட்ட அலுவலர் பாண்டி முதுகலை ஆசிரியர் மற்றும் என்எஸ்எஸ் மாணவர்கள் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி மாவட்டம். பாளையங்கோட்டை சமாதானபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் செயல்பாடுகள் குறித்து, ஆட்சித் தலைவர் ஆனந்த் மோகன் நேற்று 08.10.2026 பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



## அமெரிக்க வாழ் தமிழ் மாணவரின் உதவியால் நாமக்கல் மாவட்டத்தில் அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்காக இலவச கணினி பயிற்சி முகாம் துவக்கம்

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளை மற்றும் மைக்ரோடெக்கம்ப்யூட்டர்சென்டர் இணைந்து சின்னப்ப நாயக்கன்பாளையம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவச கணினி பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது.

விழாவிற்கு தளிர்விடும் பாரதம் அறக்கட்டளை தலைவர் சீனிவாசன் தலைமை தாங்கினார். மைக்ரோடெக் கம்ப்யூட்டர் சென்டரின் இயக்குனர் தமிழ்செல்வி அனைவரையும் வரவேற்றார் நகராட்சி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மலர்விழி, ஐன்ஸ்டீன் மெட்ரிக் பள்ளி முதல்வர் விஜயபிரபு,தளிர்விடும் பாரதம் செயலாளர் பிரபு துணைத்தலைவர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

இப்பயிற்சி வகுப்பை JRN தங்கராஜ் , திருமதி ராஜேஸ்வரி தங்கராஜ் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்த பயிற்சி வகுப்பிற்கு அமெரிக்கா பென்சில்வேனியா மாகாணத்தில் பணிபுரியும் குமாரபாளையத்தை சேர்ந்த யுகேஸ்வர் தீனூ அவர்களின் மகன் தருணிஷ் உதவியின் மூலமாக இப்பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. அமெரிக்காவில் வசித்து வரும் அவர்கள் அங்கு பல்வேறு சமூக சேவைகள் செய்து வருகின்றனர். தாங்கள் பிறந்த தாய் நாட்டிற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக இந்த பயிற்சி வகுப்பு அவர்களின் பங்களிப்போடு தொடங்கப்பட்டுள்ளது.

விழாவின் சிறப்பு அம்சமாக இந்த உதவியை வழங்கிய அமெரிக்க வாழ் மாணவர் தருணிஷ் அமெரிக்காவில் இருந்து காணொளி காட்சி வாயிலாக பேசினார். அப்போது அவர் தமிழக மாணவர்கள் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கவேண்டும் என்பதே எனது விருப்பம் என்று கூறினார்.

விழாவில் பயிற்சி பெறும் மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

தினந்தோறும் வாரத்தின் ஆறு நாட்களும் மாலை 5 மணி முதல் 6.0 மணி வரை இப்பயிற்சி வகுப்பு நடைபெறும்முடிவில் தளிர்விடும் பாரதம் பொருளாளர் சின்னையாஅனைவருக்கும் நன்றி கூறினார்.



தென்காசி மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக 9 வது தேசிய போஷன் மா பிரச்சாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனின் ஒரு பகுதியாக 08.10.2026 நடந்த விழிப்புணர்வு பேரணியை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் மரு.இரா.தண்டபாணி அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் தொடங்கி வைத்தார்.

## Israel's visafree US travel privileges at risk after flydubai incident: Report

*Israelis could lose their visa-free access to the United States after security lapses reportedly came to light following the thwarted attack on a Tel Aviv-bound flydubai flight.*

*A US delegation is expected to arrive in Israel in the coming days to assess whether the country is meeting the security conditions of the US Visa Waiver Program, The Times of Israel reported, citing Channel 12. The delegation is currently in the United Arab Emirates, where it is reviewing aviation security procedures, according to the report.*



*Israel became part of the US Visa Waiver Program in 2023. Under the arrangement, Israeli citizens can travel to the US using an Electronic System for Travel Authorization (ESTA) instead of going through the longer visa application process. The upcoming review will examine whether Israel continues to meet the requirements agreed when it joined the programme.*

*The scrutiny follows the September 30 incident involving flydubai Flight 1073, in which copilot Hamam al-Hammami allegedly attacked captain Smit Machchhar and attempted to crash the aircraft. Around 180 people were on board, most of them Israelis. Machchhar, along with several Israeli passengers, managed to stop the attack and overpower al-Hammami.*

*Nearly a week after the incident, Channel 13 reported on Tuesday that flydubai had sought permission to restart flights to Israel. The airline reportedly said its investigation was nearing completion and that several employees had been dismissed. Officials from Israel's Transportation Ministry have also reportedly been invited to visit Dubai next week. However, Transportation Minister Miri Regev has declined flydubai's request to resume operations, according to the report.*

*The Transportation Ministry and Israel's security establishment have faced criticism over their handling of foreign airline crews following the incident. Hebrew media reports on Tuesday, citing leaked comments from a closed-door meeting of the Knesset Foreign Affairs and Defense Committee, said about 1,240 aircrew members from hostile countries had entered Israel over the past year. The case involving al-Hammami has drawn particular concern. He had reportedly expressed support for al-Qaeda on social media and had been prohibited from flying in Oman because of concerns about his extremist views.*

*Israel aims to bring stranded passengers home*

*The Transportation Ministry expects all Israelis stranded in Dubai after the attack to return home by Thursday, following a series of repatriation flights operated by Israeli airlines.*

*So far, 7,415 passengers have returned to Israel from Dubai on special flights operated by Israeli carriers, as well as from Abu Dhabi on commercial Etihad Airways flights, according to the ministry.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.